உ

கடவுள் துணை.

இத்தொண்டைநாட்டில்
மேழிற்குடியாளர் சுப்பிரமணியர்பேரில்
பாடியிறைக்கும்

ஏற்றப்பாட்டு.

சென்னை:
பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

48

கடவுள் துணை.

ஏற்றப்பாட்டு.

காப்பு வெண்பா.

வையகத்திலுள்ள வளமுடையசென்னைனுக்குப்
பையஜலமிறைத்துப் பாங்குடனே-உய்யவிந்த
ஏற்றப்பாட்டைப்பாடி யென்குறைகள்தீருதற்கு
போற்றினேன் ஐங்கரன்றாட் போது.

விநாயகர் தோத்திரம்.

பிள்ளையாரேவாரும்
ஏண்ணும்பிள்ளையாரே
உன்னைத்தொழுவேனே
உனக்கடிமைநானே
எனக்குதெய்வம்நீயே
ஐந்துகரத்தோனே
ஆனைமுகத்தோனே
தும்பிமுகத்தோனே
தொந்திவயற்றோனே
பார்வதிகுமாரா
பரமனருள்பாலா
மாயன்மருகோனே
மங்கையுமைபாலா
இனிமறவேன்வேலா
(உ-ம்-பரியம்.)
இரண்டுடனேவாரி
எட்டுடனேவாரி
எப்படியும்நம்மை
ரட்சிப்பரேகர்த்தர்
கச்சிப்பெருந்தேவி
கரிவரதன்றேவி
கம்பன்மனையாட்டி
காமாட்சித்தாயார்
ஏலவாகுழலி

ஏகாம்பரனாதர்
உனைமறவேன்வேலா
(௰-ம்-பரியம்.)
ஒருபதியாலெட்டாம்
உலகமெல்லாமாதா
உமையவளொருத்தி
பரமன்மனையாட்டி
பார்வதிகௌரி
ஐங்கரனைப்பெற்ற
மங்கைசிவகாமி
இனிமறவேன்வேலா
(௨0-ம்-பரியம்.)
இருபதியாலெட்டாம்
இளங்குழவித்திங்கள்
பரமன்முடிமேலே
வீசுங்கொன்றைமாலை
ஈசர்முடிமேலே
கங்கையலைமோதும்
கர்த்தன்முடிமேலே
முருகனைமறவேன்
(௩0-ம்-பரியம்.)
முப்பதியாலெட்டாம்
மோகபாணம்விட்டான்
மூலபலமான
ராமபாணம்விட்டான்
ராவணனும்பட்டான்
கோதண்டம்வளைத்தான்
கும்பகர்னன்பட்டான்
இளையவனம்பாலே
இந்திரசித்தன்பட்டான்
நான்மறவேன்வேலா
(௪0-ம்-பரியம்.)
நாற்பதியாலெட்டாம்
நாரணன்பிறந்தான்
தேவகிமகனாய்
பார்த்திபன்பிறந்தான்
பாரதப்போர்செய்ய
தனஞ்செயர்க்குமூத்த
தருமனும்பிறந்தான்
விசையனுக்குமூத்த
வீமனும்பிறந்தான்
நரபதிக்கிளைய
நகுலசகாதேவர்
குந்திமக்களவர்
குருகுலத்துமன்னர்
பாண்டுமக்களவர்
பாஞ்சாலிக்கணவர்
அடிதொழுதேன்வேலா

(ருO-ம்-பரியம்.)

அன்பதியாலெட்டாம்
அண்ணுமலை தன்னில்
உண்ணுமுலைத்தாயார்
பண்ணினுள் தவசு
பாகம்பெறவேண்டி
உமையவள் தவசை
பரமனும்மகிழ்ந்து
பெருமானருளாலே
பெற்ருளிடப்பாகம்
ஆறுமுகவேலா

———

(சுO-ம்-பரியம்)

அறுபதியாலெட்டாம்
அம்பலத்திகூத்து
ஆடினார்பரமன்
தந்திரமாய்க்காளி
தாளுடினுள்கூட
தேவரெல்லாங்கூடி
திருநடனம்பார்த்தார்
தோராமலேகாண்
வாதாடினுள்கூட
சிவபெருமானப்போ
தூக்கிநின்ருர்காலை
நாணிநின்ருள்காளி
தேவர்சபைமுன்னே
ஏழைபங்குவேலா

(எO-ம்-பரியம்)

எழுபதியாலெட்டாம்
எழில்பெரியகாஞ்சி
நார்தனிலேவாழும்
கம்பன்மனையாட்டி
காமாட்சித்தாயார்
ஆற்றுமணல்சேர்த்து
அரனை பூசைசெய்தாள்
கம்பாநதிவெள்ளங்
கரைபுரண்டுஓட
உமையவள்பயந்து
தழுவினுள்சிவனை
தையல்முலைரெண்டும்
அரன்மேலழுந்த
கைவளைத்தழும்பு
கர்த்தன்மேலழுந்த
பரமனதுகண்டு
திருவுளமகிழ்ந்தார்
எண்ணுந்துணைவேலா

(௮0-ம்-பரியம்)
எண்பதியாலெட்டாம்
எங்கும்புகழ்பெற்ற
கங்கைநதிசூழ்ந்த
காசிவிஸ்வநாதர்
தேவர்துதிசெய்யும்
மாதுமையாள்பாகன்
அன்னபூரணியாம்
அன்னவிசாலாட்சி
தொழுதனடிவேலா
(௯0-ம்-பரியம்)
தொண்ணூறேடேலெட்
தோகைமயிலேறி [டாம்
வேலரதோவாரூர்
பச்சைமயிலேறி
சுப்ரமணியர்வாரூர்
கானமயிலேறி
கந்தரதோவாரூர்
வெற்றிமயிலேறி
வேலரதோவாரூர்
(௱-ம்-பரியம்-முற்றும்.)
வள்ளிபுலம்பாய
பிள்ளையாரேவாரும்
பிள்ளையாகப்பெற்ற

பேயன்மைந்தனல்லோ
ஆயவனைநீவி
அறுமுகவன்கொண்ட
குறத்திமகளாலும்
குறைவுவந்துநேர்ந்து
மறைக்கதெய்வயானை
மணம்புரிந்துவுங்கள்
குலத்திலொருபெண்ணை
வலப்புரத்தில்வைத்து
முடுக்காய்கலியாணம்
தொடுத்துகட்டதாலி
வயறுவுப்பினாலும்
பேயன்மகனென்று
பெண்கொடுக்கமாட்டார்
இரண்டுடனேவாரி
எட்டுடனேவாரி
என்குனத்தோன் மைந்த
ஏழைகள்மேல்பட்சம் [ன்
ஏத்திவையும்நாதா
ஐந்துடனேயொன்று
ஐயமற்றபாதம்
ஒழுக்கமழைபேய்ந்து
ஓங்குங்குடிபயிர்கள்
ஓங்கிமிகவயல்கள்

ஓய்தலில்லாநெற்கள்
கண்களித்துப்பார்த்து
களிப்புடனேகொய்து
காளைகளால்துவைத்து
காணுந்தொம்பைநிறுப்ப
கீழ்மறையோர்க்கீந்து
கீர்த்திமிகப்பெற்று
குறைகலில்லாவாழ்வு
குழந்தைமனையோடு
கூட்டிவையும்நாதா
உனைமறவேன்வேலா

(௰-ம்-பரியம்)

ஒருபதியாலெட்டாம்
ஒருமழைதவக்கம்
பயிரெல்லாம்வதக்கம்
ஒருமழைபெய்யாதோ
பயிர்களைதீருதோ
குடிவளமாகாதோ
இனிமறவேன்வேலா

(உ0-ம்-பரியம்)

இருபதியாலெட்டாம்
இருபுறமுஞ்சோலை
மதுரைவளநாடு
பக்கமெல்லாஞ்சோலை
பாண்டிவளநாடு
சுற்றிலெல்லாஞ்சோலை
சோழவளநாடு
முருகனைமறவேன்

(௩0-ம்-பரியம்)

முப்பதியாலெட்டாம்
முப்புரமெரித்தார்
தற்பரன்சிரித்தான்
தேவரெல்லாங்கூடி
தேவருருவானார்
சூரியனும்திங்கள்
சுழலும்வண்டியானார்
வேதமொருநான்கும்
வெண்புரவியானார்
சாரதிபிரமன்
சமைந்தார்தேரோட்ட
ஆதிசேடன்தன்னை
நாரியாகப்பூட்டி
மேருமலைதன்னை
வில்லாகவளைத்து
மாயவனார்தம்மை

பாணமாய்த்தொடுத்து
போர்செய்யதானும்
புறப்பட்டார்சிவனார்
நான்மறவேன்வேலா

(சO-ம்-பரியம்)

நாற்பதியாலெட்டாம்
நாகலோகமாளும்
ஆதிசேடமூர்த்தி
அந்தரத்தையாளும்
இந்திரனரசன்
மண்ணுலகையாளும்
அண்ணல்ரகுராமன்
அடிதொழுதேன்வேலா

(டுO-ம்-பரியம்)

அன்பதியாலெட்டாம்
ஆரூருச்சிவனார்
தேரோடுந்தெருவில்
தொண்டர்சுந்தர்க்காக
தூதாகநடந்தார்
பாவவதன்மனைக்கு
பாதிராவிரவில்
திருவடிசிவக்க
சென்றாரேசிவனார்
ஆறுமுகவேலா

(சூO-ம்-பரியம்)

அறுபதியாலெட்டாம்
அலைகடல்கடைய
விஸமதில்பிறக்க
அமரர்கள்நடுங்க
சரணமென்றடைய
தஞ்சமென்றவாக்கு
அஞ்சலென்றருளி
அமுதுண்டார்விடத்தை
ஆதிசிவனாரும்
ஏழைபங்குவேலா

(எO-ம்-பரியம்)

எழுபதியாலெட்டாம்
எருமைக்கிடாயேறி
எமதர்மனும்வந்து
திருக்கடையூர்தன்னில்
சிவனைபூசைசெய்யும்
பதினாறுவயது
பாலன்மார்க்கண்டனை
பாசம்போட்டிழுத்தார்
பாலனும்நடுங்க
கர்த்தன்கோபங்கொண்டு

காலனையுதைத்தான்
பூமியும்நடுங்க
காலனும்விழுந்தான்
எண்ணும்பதிஞருய்
அண்ணல்வரம்தந்தார்
எண்ணுந்துணைவேலா
(அ0-ம்-பரியம்)
எண்பதியாலெட்டாம்
ஏழைரகுராமன்
சீதைமணவாளன்
கோசலைகுமாரன்
கோதண்டவில்லாளி
அயோத்திநகருளும்
ஆண்மையுள்ளராமர்
தொழுதனடிவேலா
(கூ0-ம்-பரியம்)
தொண்ணூறெட்டா
தென்மதுரைசொக்கர் [ம்
மண்சுமந்தாரப்போ
வைகையணைகட்ட
வாங்கிக்கொண்டார்கூலி
வாணிச்சிகைபிட்டு
வாயிலிட்டுப்போவார்
பிட்டுமாண்டிடுமாம்
ஒருதட்டுமண்போட்டு
மறுபடியும்வருவார்
வாணிச்சிகைபிட்டுக்கு
ஓடிவந்துநிற்பார்
ஓடிபலம்பாய
(ா-ம்-பரியம்)
பிள்ளையாரேவாரும்
பிடித்தேனையாஏற்றம்
விக்கினரேவாரும்
விட்டுவிட்டேன்ஏற்றம்

ஆக-பரியம்-உ0-க்கு-இலக்கம்-க0ரு.

ஏற்றப்பாட்டு.

முற்றிற்று.